பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 08 வியாழக்கிழமை (22.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 115

# ஐ.நா. சமாதானக் குழுவின் பிரசன்னத்தில் ஏ-9 பாதையைத் திறக்க வழிசெய்யவும்

## செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு மனித உரிமைச் செயலகம் மனு



கிளிநொச்சி,மார்ச்22

**யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு தரப்பான விடுதலைப் புலிகள் ஏ-9 தரைவழிப் பாதையைத் திறப்பதற்குத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்துள்ள நிலையில் -**

**ஐ.நா. சமாதானக் குழுவின் பிரசன்னத்தில் அந்தப் பாதையைத் திறப்பதற்கு வழி செய்யுமாறு -**

**வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு அனுப்பிய கடிதத்தில் கோரியுள்ளது.**

அந்தக் கடிதத்தில் -

இலங்கைத்தீவின் சமாதான நடவடிக்கைகள் பல காரணங்களுக்காகத் தடைப்பட்டுள்ளமையால் எழுந்துள்ள அவல நிலை குறித்து எமது செயலகம் தனது ஆழ்ந்த கரிசனையைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறது.

இச்சந்தர்ப்பத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கும் அவசியம் பற்றி பிரித்தானிய பிரதமர் ரொனிபிளேயர் தெரிவித்த கருத்துக்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமென நினைக்கிறோம்.

பிரித்தானிய பிரதமர் தெரிவித்த கருத்துக்களை வரவேற்றும் அதேவேளை நீங்களும் அவரது கருத்துக்களுக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் ஐ.நாசபையின் அர்த்தமுள்ள ஈடுபாட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று விநயமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் விதந்துரைக்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் ஷெல்தாக்குதல்

வவுனியா, மார்ச்22

நேற்றுக் காலையில் ஓமந்தை முன்னரங்க படை நிலைகளில் இருந்து விடுதலைப்புலிகள் பகுதி நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை சோதனைச்சாவடியில் பயணம் செய்வதற்கு காத்திருந்த மக்கள் ஷெல் தாக்குதல் காரணமாக அல்லோல கல்லோலப்பட்டனர். (அ-4)

## புதுக்குடியிருப்பில் நேற்று மாலை விமானத்தாக்குதல்

முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது விமானப்படை விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தியிருக்கின்றன. நேற்று பிற்பகல் 3.30மணியளவில் கிபீர் விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குல் நடத்தியதால் வீடுகள் பலத்த சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

## மாவடிவேம்பு, முறக்கொட்டாஞ்சேனையில் புலிகள்-படையினர் 2 நாள் கடுஞ்சமர்

கொழும்பு, மார்ச் 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிவேம்பு, முறக்கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலி களுக்கும் படையினருக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை இரவு தொடக்கம் நேற்று மாலை வரைகடும் சமர் இடம்பெற்றது.

மாவடிவேம்பு, செங்கலடி, சித்தாண்டி, கும்புறுமூலை ஆகிய படைமுகாம்களில் அமைந்துள்ள பகுதிக்குள் ஊடுருவி படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர். இந்தத் தாக்குதலைப் படையினர் முறியடித்து, புலிகளுக்குப் பலத்த சேதத்தை ஏற்டுத்தினர் என்று படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டனர். 11 படையினர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மட்டக்களப்பின் வடபுறமுள்ள முறக்கொட்டாஞ்சேனை மற்றும் மாவடி வேம்பு இராணுவ முகாம்கள் மீதும் திருகோணமலை-மட்டக்களப்பு ஏ-15 வீதியில் உள்ள காவலரண் மீதும் நேற்று புதன்கிழமை அதிகாலை 12.45 மணிக்கு நடத்தப்பட்ட தாக்குதலில் படைத்தரப்புக்கு அதிக சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மாவடிவேம்பில் அமைந்திருந்த மினி முகாம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாவும் முறக்கொட்டாஞ்சேனை முகாம் கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியதாகவும் தமிழ்நெட் இணையத்தளம் தெரிவித்திருந்தது.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியைக் கொலை செய்ய ஐ.தே.க. சதியாம் ஆளுந்தரப்பினர் நாடாளுமன்றில் குற்றச்சாட்டு!

கொழும்பு,மார்ச்22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்வதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி சதித்திட்டம் வகுத்துள்ளதாக சபை முதல்வரும் சுகாதார அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன் றத்தில் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை -

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் உருவப்படத் திறப்புநிகழ்வில் கலந்துகொள்ளவேண்டாம் என்று ஜனாதிபதிக்குத் தாம் அறிவித்துள்ளதாக ஆளுங்கட்சியின் கொரடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே சபையில் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி உறுப்பினரான மஹிந்த ரத்தினதிலக்க, எம்.பிக்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு செய்யப்பட்ட புதிய ஏற் பாடுகள் குறித்து

(03 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆரின் உருவப்படம் நேற்று திரைநீக்கம்

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் முழு அளவிலான உருவப்படம் நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் டபிள்யூ ஜே.எம் லொக்கு பண்டார ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-1)

## உடப்பு கிராமத்தில் 73 தமிழர்கள் கைது!

சிலாபம் - உடப்பு பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் சந்தேகத்தின் பெயரில் 73தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருபெண்களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணிமுதல் சுமார் 100 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்ட இந்தச் சோதனையின்போது கைதுசெய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவு, பதுளை மற்றும் மருதானை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரிலேயே இவர்களைக் கைதுசெய்திருக்கிறோம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். விசாரணைகளின் பின் அனைவரும் விடுவிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## கப்பம் கோரல்களுக்கு எதிராக புத்தளத்தில் பூரண ஹர்த்தால்

நேற்று புதன்கிழமை புத்தளம் நகரில் இடம்பெற்ற பூரணஹர்த்தால் காரணமாக நகரின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது. அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்ட காரணத்தினால் நகர் வெறிச்சோடியது.

கடந்த திங்கட்கிழமை புத்தளம் நகரிலுள்ள நகைக்கடை ஒன்றினுள் சிலர் பிரவேசித்து கப்பம் கோரியபோது கப்பம் தரமுடியாது என வாதிட்ட உரிமையாளர் ஒருவர் வாள்வெட்டுக்கு உள்ளாகி கடுமையான காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இது விடயத்தில் உரிய நீதி கிடைக்கவில்லை என்றும், சந்தேக நபருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் இனிமேல் இப்படியான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என்பதை உறுதிசெய்யுமாறும் கோரியே நேற்றைய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. (அ-சி)

## கோட்டாபய ராஜபக்ஷ மீதான தாக்குதல்: வெளிநாட்டிலிருந்து வந்த தமிழ்ப்பெண் கைதானார்

கொழும்பு,மார்ச் 22

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவைக் கொலைசெய்யும் நோக்கோடு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சத்தியவாணி என்ற தமிழ்ப்பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

சில நாட்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங்கிய சமயம் இவர் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்.

இத்தகவலை பயங்கரவாதச் செயல்களை விசாரிக்கும் பொலிஸ் பிரிவு நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றது.

மேற்படி தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர் எனக் கருதப்படும் சூத்திரதாரி, போலி அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு உதவினார் என்ற சந்தேகத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் விஜய ரணசிங்க என்பவர் கைதுசெய்யப்பட்டார். தடுப்புக் காவலில்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் படையினருக்கு தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்க இந்தியா இணக்கம்

கொழும்பு, மார்ச் 22

இலங்கைப்படையினருக்கு தொடர்ந்தும் இராணுவப் பயிற்சிகளை வழங்க இந்தியா உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றது என்று இந்தியத் தகவல்கள் தெரிவித்திருக்கின்றன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சின்போதே இந்த இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சில் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து, நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றதாக வெளிவிவ கார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கை - இந்திய கூட்டுக்கடற்படை ரோந்து தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

**ஒருங்கிணைந்த ரோந்து குறித்துப் பரிசீலனை**

இதுவரைகாலமும் 'கூட்டுரோந்து நடவடிக்கை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி

(03 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் இடம்பெயர்ந்தோருக்கு உணவுப் பொருள்; சர்வதேசத்திடம் ஐ.நா. உணவுத்திட்டம் அவசர கோரிக்கை

**கையிருப்பில் உள்ளவை அடுத்த மாதம் வரைக்குமே போதும்**

கொழும்பு, மார்ச் 22

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் மோதல்களினால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான உணவுத்தேவைகளுக்கும், ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கும் உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட அமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது.

''எங்களுக்கு மேலதிக நிதியுதவி கிடைக்காது போனால் எமது கையிருப்பில் உள்ள உணவுப்பொருள்கள் எதிர்வரும் ஏப்ரல் மாத முடிவில் தீர்ந்துபோகும்'' - என்று உலக உணவுத் திட்டத்தின் ஆசியப் பிராந்தியத் தலைவர் ரொனி பான்பெறி தாய்லாந்தின் தலைநகரான பாங்ஹொக்கில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெயர்ந்துள்ள 155,000 ஆயிரம் மக்களுக்கும் உடனடி அத்தி யாவசியப் பொருட்கள் தேவைப்படுகின்றன

(03 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து அகதிகள் தமிழ்நாட்டுக்கு!

இலங்கையைச்சேர்ந்த மேலும் 5 அகதிகள் நேற்றுமுன்தினம் தமிழ்நாட்டின் இராமநாதபுரம் கரையூரைச் சென்றடைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

வவுனியாவைச் சேர்ந்த இந்த அகதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் - பேசாலைப் பகுதியிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இராமநாதபுரம் சென்ற இந்த அகதி கள் கடுமையான விசாரணைகளின் பின் னர் மண்டபம் - அகதி முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவில்



மலர்வு 19 . 11 . 1946

உதிர்வு 02 . 04 . 2006

### திருமதி செல்வராசா சரஸ்வதி

(திதி: பங்குனி சதுர்த்தி)

அன்பால் அரவணைத்து ஆசை மொழியூட்டி
மன்னு புகழ் கீர்த்தியுடன் வாழ வைத்த தெய்வமே!
பாதி வழியில் எம்மை பதைக்க வைத்துச் சென்றதேனோ!
ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் துயரம்
நெஞ்சிருக்கும் காலமெல்லாம் நினைவோடு வாழ்வோம்.

108/9, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (58965)

உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

---


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

Branch office No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 26/03/2007- 09.00

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I : 23/03/2007, BatchII : 24/03/2007
BatchIII: 25/03/2007, Batch IV :28/03/2007

3 மாதகால
Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 24/03/2007, 25/03/2007, 26/03/2007 ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.


---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் புவியியல் ஆசானும் எமது உயர்தர மாணவ ஒன்றிய தலைவருமான திருமதி. N.E.தர்மரட்ணம் அவர்களின் அன்புத் தந்தை

### M.A.சூசைதாசன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் எமது ஆசானுக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி நிற்கின்றோம்.

உயர்தர மாணவர் ஒன்றியம்,
யா/புனித சாள்ஸ் ம.வி., யாழ்ப்பாணம்.

(58954)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி N.E.தர்மரட்ணம் அவர்களின்
அன்புத் தந்தை

### M.A. சூசைதாசன்

அவர்களின் மறைவுகுறித்து துயருற்றிருக்கும் எமது ஆசிரியருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/புனித சாள்ஸ் ம.வி., யாழ்ப்பாணம்.

(58955)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 30.01.1904

உதிர்வு 20.02.2007

### திருமதி நன்னித்தம்பி செல்லம்மா

20.02.2007 செவ்வாய்க்கிழமை எமது அன்புத் தெய்வம் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு தொலைபேசி மூலமும் நேரிலும் எமது இல்லம் வந்தும் ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் மரணச் செய்தியை பத்திரிகை, வானொலி மூலம் தெரிவித்து உதவிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (22.03.2007) வியாழக்கிழமை மு.ப. 11மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்தி பூசையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (58926)

- குடும்பத்தினர்.

---


### வீடு காணி விற்பனைக்கு

மானிப்பாய் கட்டுடையில் எல்லா வசதியும் கொண்ட ஆறு அறைவீடும் அதனோடு சேர்ந்த ஆறு பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

கந்தையா இலட்சுமணன்
சமாதான நீதிவான்,
யூனி சி.ஆர் தண்ணி தாங்கி வீதி,
கட்டுடை, மானிப்பாய். (58950)


---

### தவறிவிட்டன

புவனேஸ்வரி சுப்பிரமணியம் என்பவரது தேசிய அ.அட்டை (397591506V), ஓய்வூதியம் பெறும் அட்டை என்பன 02.03.2007 அன்று கோக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் எஸ்.நடேசன், 56,சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும்.

தொ.பே.: 0773637836 (58958)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 12 . 07 . 1928

மறைவு 20 . 02 . 2007

### அமரர் கந்தையா நல்லதம்பி (B.Com)

(லிபேட்டி தியேட்டர் உரிமையாளர்,
முன்னாள் ஆசிரியர், சென்.பற்றிக்ஸ்)

அன்பின் உறைவிடமாய்
அமைதியின் திருவுருவமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
இதயத்தில் கலந்த - எம்
தெய்வமே!
எம்மோடு வாழ்ந்த காலங்களும்
உங்கள் அன்பான திருவுருவமும்
என்றும் எம் நெஞ்சைவிட்டு
அகலாது

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.03.2007) வியாழக்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

லிபேட்டி, அச்சுவேலி. (58953)

- குடும்பத்தினர்.

---

# நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சின்னத்தம்பி தங்கமயில்

(கிளாக் ஐயா - சிவராசா)

திதி: 22.03.2007



பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
எங்களை வழி நடத்திய அன்புத் தெய்வமே
ஆண்டு ஒன்று நகர்ந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காதையா
பகிடிகள் சொல்வாய் ஐயா
உதடுகள் சிரிக்காமல் ஐயா
பெரியவர் சிறியவர் பேதமில்லாமல்
மனம் விட்டு பழகிடுவாய் ஐயா
நித்தம் நித்தம் தேடுகிறோம்
நிஜமாய் அருகில் வாருங்கள் ஐயா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னை மடியில் 04-04-1937

இறைவன் அடியில் 01-04-2006

(58917)

கிராமக் கோட்டடி,
பருத்தித்துறை.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# சர்வதேச சமூகத்தின் கண்கள் இனிமேலாவது திறக்குமா?

சிறுபான்மையினரின் நிலைமை கடந்த ஆண்டில் மிக மோசமான அளவு சீர்கெட்டுப் போன நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் முன்னணி இடம் கிடைத்திருக்கின்றது.

'சிறுபான்மையினரின் உரிமைக் குழுமம் - சர்வதேசம்' என்ற அமைப்பு உலகின் சிறுபான்மையினர் நிலைமை குறித்து வெளியிட்ட அதன் வருடாந்த அறிக்கையிலேயே இந்த விவரம் அம்பலமாகியிருக்கின்றது.

இனப்பாகுபாட்டை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அதற்கு முதல்நாள் - மார்ச் 20 ஆம் திகதி - நியூயோர்க்கில் - ஐ. நாவில் வைத்து இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டது.

ஆனால் இந்தச் சர்வதேச மதிப்பாய்வு பற்றிய அறிக்கைக்கு இலங்கை ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவமே, இந்த நாடு குறித்து அந்த அறிக்கையில் கூறப்பட்ட உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளப் போதுமானதாகும்.

ஐ. நாவில் வைத்து பகிரங்கப்படுத்தப்பட்ட இந்த அறிக்கையை - சிறுபான்மையினர் மீதான கொடுமைகள் இலங்கையிலேயே அதிகளவில் இழைக்கப்படுகின்றன என்ற உண்மையை அம்பலப்படுத்தும் இந்த அறிக்கையின் விவரத்தை - இலங்கையில் பெரும்பான்மை இனத்தவரை எட்டுகின்ற எந்த ஆங்கில, சிங்களப் பத்திரிகையும் கொழும்பில் பிரசுரிக்கவேயில்லை.

சிறுபான்மையினர் விடயத்தில் பெரும்பான்மையினர் தவறிழைப்பதை அம்பலப்படுத்தும் சர்வதேச மதிப்பாய்வு அறிக்கையை - சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்து, அவர்களுக்குப் பாகுபாடு காட்டுகின்றமைபோல - அமுக்கி, செய்தியை வெளியிடாமல் தவிர்த்து விட்டன போலும் பெரும்பான்மையினரின் மொழி ஊடகங்கள்.

முன்னர் இலங்கை இவ்விடயத்தில் இவ்வளவு மோசமான நிலையில் இருந்ததில்லை. ஆனால் இந்த ஓராண்டுக்குள் சிறுபான்மையினருக்கு எதிராக மோசமாகத் தீங்கிழைக்கப்படும் நாடுகளின் பட்டியலில் ஒரேயடியாக 47 இடங்கள் முன்னேறி முதல் இருபது இடங்களுக்குள் ஒன்றாக இலங்கையும் வந்திருக்கின்றது என்ற உண்மையையும் அந்த அறிக்கை வெளிப்படுத்தியிருக்கின்றது.

'ராஜபக்ஷ அண்ட் பிறதர்ஸ்' கம்பனியின் ஆட்சி நிர்வாகக் கொள்கையே இந்தச் 'சாதனையை' இலங்கைக்குப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

பேரினவாதத்திலும், மேலாண்மைச் சிந்தனையிலும் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களத்தை, அதே பாணியில் திருப்திப்படுத்தி, 'தாஜா' செய்து, அதன் ஆதரவை வளைத்துப் போட்டுக் கொள்வதன் மூலம் தமது ஆட்சி நிர்வாகத்தைத் தொடர்ந்து உறுதிப்படுத்தித் தக்கவைத்துக் கொள்ள 'ராஜபக்ஷ அண்ட் சகோதரர்கள்' அணி விரும்புகின்றது.

அதற்காகவே சிறுபான்மையினரை ஒடுக்கும் கைங்கரியம், முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கைத் தீவில் மிக மோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. அதையே இப்போது சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட மதிப்பாய்வு அறிக்கைகள் அம்பலப்படுத்துகின்றன.

இலங்கைத்தீவு, காலனித்துவ வாதிகளின் கையிலிருந்து விடுபட்டு அரசியல் அதிகாரம் கைமாறியதை அடுத்து இங்கு பேரினவாதம் மேலாண்மை பெற்று கோலோச்சத் தொடங்கியது. சிறுபான்மையினருக்கு எதிரான அரச அடக்குமுறை குரூர வன்முறை வடிவம் எடுத்தது.

அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட இந்த அடக்குமுறை வரலாறு, தமிழினத்தின் தேசிய வாழ்விற்கு ஆதாரமான அத்தியாவசிய அடித்தளங்களை அடியோடு தகர்த்துவிடும் நாசகாரத் திட்டமாக இங்கு கட்டவிழ்ந்தது.

தமிழரின் இருப்புக்கு ஆதாரமான - மையவிசையான - மொழி உரிமையில் தொடங்கி, கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை, பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமை மற்றும் அங்கு சீவிப்பதற்கான வாழ்வுரிமை, தமிழரின் சமய, பண்பாடு வாழ்வியலுக்கான உரிமைகள் போன்றவை வரை பரந்துபட்டு - பலமுனைத் தாக்குதலாக - இலங்கைத்தீவில் உரிமைப்பறிப்பும் அடக்குமுறைகளும் விரிந்தன.

தமிழினம் ஓர் இனமாகத் தன்னை அடையாளப்படுத்தவும், தமிழ் மக்கள் ஓர் இனமாகத் தாங்கள் ஒருங்கிணைந்து வாழ்வதற்கும் அவசியமான மூலங்களையே பேரினவாத அடக்குமுறை இலக்கு வைத்துத் தாக்கி அழித்தது.

இதுவரை காலமும் - பல்வேறு சிங்கள அரசுகளாலும், அரசுத் தலைவர்களாலும் - இலைமறைகாயாக, ஒளிவு மறைவுத்திட்டமாக, முன்னெடுக்கப்பட்ட இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் இப்போது வெளிவெளியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒரே முனைப்போடு முன்னெடுக்கப்படுகின்றன.

அடக்குமுறைக்கு எதிராகத் கிளர்ந்தெழுந்து, உரிமைக்குரல் எழுப்பும் தமிழினத்தின் வலிமையையும், பேரம் பேசும் வலுவையும் ஒரேயடியாக அடித்து, முறித்துப் போடுவதன் மூலம் உரிமைக் கோரிக்கையை ஒரேயடியாக அமுக்கவும், அடக்குமுறையை முழு அளவில் முன்னெடுக்கவும் துடிக்கின்றது சிங்களம்.

தமிழர்களின் உரிமைக்குரலை, 'பயங்கரவாதம்' எனச் சித்திரித்து, தீண்டத்தகாத விடயமாக அடையாளப்படுத்தி ஒதுக்குவதன் மூலம் தென்னிலங்கையின் அடக்குமுறைக்கு தெரிந்தோ, தெரியாமலோ துணை போகிறது சர்வதேச சமூகம்.

அதன் கண்களை, சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய சர்வதேச ஆய்வுக்குழுமம் நடத்திய தற்போதைய மதிப்பாய்வு தொடர்பான அறிக்கையாவது திறக்கவைக்குமா? தமிழரின் ஏக்கத்துடனான எதிர்பார்ப்பு இது.

# இடம்பெயர்ந்த 356 ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் தற்காலிக இணைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 22

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு வந்துள்ள 356 ஆசிரியர்களுக்குத் தற்காலிக இணைப்பு இங்குள்ள பாடசாலைகளில் வழங்க மாகாணக் கல்வியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற நேர்முக விசாரணையில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு, தற்காலிக இணைப்பு வழங்குமாறு யாழ். வலய அலுவலகத்தை மாகாணக் கல்வியமைச்சு பணித்துள்ளது.

மாகாணக் கல்வியமைச்சில் இருந்து நேற்றுக் கிடைத்த பட்டியலின் பிரகாரம் -

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றிய 169 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றிய 136பேருக்கும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் கடமைபுரிந்த 51 பேருக்கும் யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தற்காலிக இணைப்புக் கிடைத்துள்ளது.

இவர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளை ஒதுக்க யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், நோயாளிகள், நோயாளிகளான பெற்றோரைப் பராமரிப்பவர்கள், பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியை தொடர்பவர்கள் ஆகியோருக்கே தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனையோர் குறித்து எந்த அறிவித்தலும் மாகாண அமைச்சிலிருந்து கிடைக்கவில்லை என்று அறியவந்தது.

(அ-1-88)

## ICC Cricket World Cup West Indies 2007 — உலகக் கிண்ண 2007 கிரிக்கெட் போட்டி

## தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து அடுத்த சுற்றுக்கு

உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றியீட்டிய தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து அணிகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளன.

தென்னாபிரிக்கா - ஸ்கொட்லாந்து அணிகளுக்கிடையிலே நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. பிறவுன் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 23.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. கிறேம் சிமித் 91 ஓட்டங்களைப் பெற்றார். இந்தப் போட்டியில் தோல்வியடைந்ததன் காரணமாக ஸ்கொட்லாந்து அணியும் உலகக்கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறுகிறது.

### நியூஸிலாந்து வெற்றி

மற்றோர் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 148 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 331 ஓட்டங்களைப் பெற்றது. றோஸ் ரெய்ஸ் 85 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரவி துஷ்ஷா 71 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

**இன்றைய ஆட்டங்கள்**
*ஸ்கொட்லாந்து எதிர் நெதர்லாந்து
*நியூஸலாந்து எதிர் கனடா

## ஐ.நா. சமாதானக் குழுவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட அரசியல் பேச்சுவார்த்தைகளை இரு தரப்பினரும் மீளத்தொடங்கவேண்டுமென்ற பிரித்தானியப் பிரதமரின் கருத்தை நாங்கள் முற்றாக ஏற்றுக்கொள்கின்றோம். நோர்வே அரசின் அனுசரணையுடன் சர்வதேச சமூகத்தின் கடின உழைப்பால் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் பல தசாப்தங்களாக நீடித்துவரும் இனப்பிணக்கை நீக்கி நிலைத்து நிற்கும் தீர்வைக் கொண்டு வருவதற்கான சகல அம்சங்களையும் தன்னுள் கொண்டுள்ளது என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம்.

யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையை மீளத் திறப்பதற்கு ஆவன செய்வது சாலச் சிறந்தது. தரைவழிப் பாதை மக்களின் அடிப்படை உரிமை என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை.

தரைவழிப்பாதைக்கு மாற்றீடாக முன்வைக்கப்படும் கடல் வழிச் சுற்றுப் பாதை மக்களுக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. மாறாக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மனித அவலத்திற்குள் செல்வம் சேர்ப்பதற்காக புதிய கப்பல்களை வாங்கிய நிறுவனங்களுக்கே உதவும்.

### ஐ.நா. சபையின் அர்த்தமுள்ள ஈடுபாட்டை வலுவாக்குக

மனித உரிமைகள் பேணப்படுவதையும் தேசிய பிணக்கிற்குத் தீர்வு காணப்படுவதையும் அர்ப்பணிப்புடன் இலக்காகக் கொண்ட மனித உரிமை அமைப்பு என்ற வகையில் நாம் இலங்கை அரசியல் பிணக்கில் ஐ.நா. சபையின் அர்த்தமுள்ள ஈடுபாட்டை வலுவாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

இந்த வகையில் யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை தங்குதடையற்றதாக அமைவதை உறுதிப்படுத்தும் ஓர் ஐ.நா. சமாதானக் குழுவின் பிரசன்னத்தை சாத்தியமாக்குவது பற்றி நீங்கள் தீவிர கரிசனை கொள்ள வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். ஒப்பந்தத்தின் ஒரு தரப்பான விடுதலைப் புலிகள் தரைவழிப்பாதையைத் திறப்பதற்கு தங்கள் சம்மதத்தைத் தெரிவித்துள்ள இந்த நிலையில் இலங்கை அரசும் பொறுப்புணர்வுடன் நடந்து இதைச் சாத்தியமாக்க வேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடாதிருத்தலும் அதற்கும் மேலாக மக்கள் தொடர்பறுந்த நிலையில் இரு கூறாகப் பிரிந்திருப்பதும் மனிதாபிமானப் பேரழிவிற்கும் மனித உரிமை மீறல்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது. இனிமேலும் தாமதிக்காது இருதரப்பினரும் பகைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து அரசியல் விவேகத்துடன் சமாதான நடவடிக்கையை மீளத் தொடங்குவது அவசியம் - இப்படி மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் ம.சே.கருணாரட்ணம் அடிகளார் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(அ-1)

## கிழக்கில் இடம்பெயர்ந்தோருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் உலகஉணவுத்திட்டம்தெரிவித்துள்ளது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது எமக்கு மேலதிக உதவிகள் தேவைப்படுகின்றன. அவை முக்கியமானவை; மற்றும் அவசரமானவை. இலங்கையில் போரினால் ஏற்பட்ட துன்பங்கள் தொடர்கின்றன. அனைத்துலக சமூகத்தின் உதவிகளும், ஆதரவுகளும் குறைவடையின் அது இடம்பெயர்ந்த மக்களை மேலும் காயப்படுத்தும்.

### கடந்த வாரத்தில் மட்டும் 95,000 பேர் இடம்பெயர்வு

கடந்த பல மாதங்களாக ஸ்ரீலங்காவின் நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மட்டக்களப்பில் உள்ள இடம்பெயர்ந்த 60,000 மக்களுக்கு உலக உணவுத்திட்டம் உணவு உதவிகளை வழங்கிவந்துள்ளது. ஆனால் தற்போது மட்டக்களப்பு மேற்கில் அதிகரித்திருக்கும் எறிகணைத் தாக்குதல்களால் மேலும் 95,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு பணியாற்றும் உலக உணவுத்திட்ட அமைப்பு மற்றும் ஏனைய மனிதாபிமான நிறுவனங்களை மக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு தடையின்றி செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று சிறிலங்கா அரசு மற்றும் விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளோம். ஸ்ரீலங்கா அரசுடன் நாம் உடன்பாட்டை மேற்கொண்டுள்ள ஓர் அமைப்பாக தொடர்ந்தும் பணியாற்றுவோம். முன்னணி இடங்களிலும் செயலாற்றுவோம்.

புதிதாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு நாம் சில மாவட்டங்களில் தாய் - சேய் ஊட்டச்சத்து திட்டம், பாடசாலை உணவுத்திட்டம் போன்றவற்றை நிறுத்தி வைத்துள்ளோம். 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவந்த 'வேலைக்கான உணவு' என்னும் திட்டமும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது - எனத் தெரிவித்தார்.

(அ-சி)

## வெளிநாட்டிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்ட அவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்திய விசாரணைகளின் தொடர்ச்சியாகவே சத்தியவாணி என்ற இந்தப் பெண் தற்போது ... கைது செய்யப்பட்டார் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(சி)

## யாழ்.நாட்டுக்கூத்துக் கலைஞர் நீர்கொழும்பில் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச் 22

குருநகர், இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞரான அண்ணாவியார் கிறகோரி கிறிஸ்தோப்பர் (வயது 55) நேற்று அதிகாலை நீர்கொழும்பில் கடத்தப்பட்டுள்ளார்.

தனது மகளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு வீடு திரும்பும் வாகனத்தை வழிமறித்த இனந்தெரியாதோர் அவரைக் கடத்திச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-88)

## பல்கலைக்கழகத்தில் விசேட வழிபாடு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் புதிய கல்வியாண்டுக்குான கற்கை நெறிகள் இன்று ஆரம்பமாகின்றன.

அதற்கு முன்பாக காலை 8 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளதாக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. சகல புகுமுக மாணவர்களையும் ஆரம்ப விரிவுரைகளில் கலந்துகொள்ளுமாறும் ஒன்றியம் கேட்டுள்ளது.

## மாவடிவேம்பு,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் படுவான்கரைப் பகுதி நோக்கிய படை நடவடிக்கைக்கு ஏ-15 சாலையில் தயாராக இருந்த சிறிலங்காப் படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர் என்று இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார். (அ-1)

## ஜனாதிபதியைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரிமைப் பிரச்சினையை கிளப்பிய வேளையிலேயே, இரு தரப்பினருக்கும் இடையில் கடும் சொற் போர் நடைபெற்றது.ஒரு கட்டத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் மீது சீறிப்பாய்ந்தனர்.

நாடாளுமன்றில் பெரும் சர்ச்சை உண்டானது. அங்கு அமைதியை ஏற்படுத்தச் சபாநாயகர் பெரும் சிரமப்பட்டார்.

ஒரு கட்டத்தில் - முன்னர் எப்போதும் இல்லாத வகையில் ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்துக் கள் அதிகரித்துள்ளன. அவரது வருகையை முன்கூட்டியே நாம் அறிவித்திருந்தால் ஐ.தே.கவினர் வேறு யார் மூலமாவது ஜனாதிபதிக்கு ஆபத்தை உண்டாக்கியிருப்பர் - என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மீண்டும் கூறினார்.

அதுமட்டுமின்றி ஜனாதிபதியை நாடாளு மன்றுக்கு வரவேண்டாம் என்று அவரிடம் சொல்லப்போவதாகக் கூறி சபையை விட்டு வெளியே போனார்.

அப்போதும் சபையில் மீண்டும் சர்ச்சை கிளம்பியது.

அவ்வேளையில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, சபை முதல் வரின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. சந்தர்ப்பவாதக் கட்டுக்கதை என்று கூறித் தமது தரப்புமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்தார்.

''ஹிட்லர் தனது நாடாளுமன்றத்தை தீவைத்து எரித்துவிட்டு முதலில் கொம்யூனிஸ்டுகள் மீது குற்றம் சுமத்தி அவர்களைச் சித்திரவதை செய்தார். பின்னர் தனது சகாக்களே இதனைச் செய்தனர் என்று அவர்களையும் தண்டித்தார்'' இப்படித்தான் இருக்கின்றது நிமல் சிறி பால டி சில்வா வின் இந்தக் குற்றச்சாட்டு என்றும் ரணில் ஓர் உதாரணத்தைக் குறிப்பிட்டார். (அ-சி)

## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இலங்கை முதன் முதலாக 'ஒருங்கிணைந்த ரோந்து நடவடிக்கை' என்ற புதிய வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பது புதிய மாற்றமாகக் கருதப்படும் என்று இந்திய இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. இலங்கையின் இந்த யோசனை குறித்து, இந்தியா பரிசீலித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை விவகாரங்களை புதுடில்லியிலிருந்து கையாளும் ஸ்பெயின், பெல்ஜியம், கொஸ்டரிக்கா மற்றும் செக்குடியரசு ஆகியன உட்பட 16 ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களை நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சர் சந்தித்திருந்தார் எனவும் கூறப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடைவிதித்திருந்தபோதிலும், அவர்கள் தொடர்ந்து அந்நாடுகளில் நிதிதிரட்டுகின்றனர் எனவும், அந்த நிதி ஆயுததளபாடங்கள் வாங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் ரோஹித போகொல்லாகம வெளிநாட்டுத் தூதுவர்களிடம் எடுத்துரைத்திருக்கின்றார். மேலும் விடுதலைப் புலிகள் ஐரோப்பிய நாடுகளில் நிதி திரட்டுவதை தடுத்து நிறுத்துமாறும் அவர் தூதுவர்களிம் வலியுறுத்தியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## நாளை

பங்குனி - 09
வெள்ளிக்கிழமை
23.03.2007
திதி: பஞ்சமி
முன்னிரவு : 09.40
நட்சத்திரம்: கார்த்திகை
முன்னிரவு : 11.48
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 06.16 - 07.06
ராகுகாலம் : 10.46 - 12.16

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

### பாடசாலை மைதானத்தில் கிரனேட் மீட்பு

வடமராட்சி மகளிர் மகா வித்தியாலய மைதானத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணி யளவில் கிரனேட் ஒன்றை படையினர் மீட்டுள்ளனர். பின்னர் அதனை அவர்கள் அங்கு வைத்து செயலிழக்கச் செய்தனர். (அ-1-155)

### அடிகாயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

புதிய செம்மணி வீதியில் அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

அந்தச் சடலம் கட்டைப்பிராயைச் சேர்ந்த செல்லையா ஜெகதீஸ்வரன் (வயது 42) என்பவருடையது என்று இனங்காணப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார்.

நேற்றுமுன்தினம் இரவு உணவருந்திய பின்னர் விறாந்தையில் படுத்திருந்தார் என்றும் 11 மணியளவில் பார்த்தபோது அவரைக் காணவில்லை என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. (அ-1-78-203)

### மீன்பிடிக்க நேற்று அனுமதி இல்லை

வடமராட்சிக் கடலில் மீன்பிடிப்பதற்கு படையினர் நேற்று அனுமதி வழங்கவில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

தொழிலுக்குச் சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் -

இரண்டு மாதங்களுக்குப் பின்னர், நிபந்தனையின் அடிப்படையில், கடந்த 16ஆம் திகதி தொடக்கம் வடமராட்சிக் கடலின் சில பிரதேசங்களில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந் தது. ஆனால், நேற்றுத் தொழிலுக்குச் செல்ல முடியவில்லை.

(அ-1-115)

### கல்வியியல் கல்லூரிக்கு தெரிவானோர் விவரம்

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய மாணவர்களுக்கான கல்வியாண்டு எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகும்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தேர்ச்சிக் கடிதம் மற்றும் ஆவணங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

தெரிவான மாணவர்களின் விவரங்களை உதயன் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (அ-1)

### எரிபொருள் விநியோகம்

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முற்றவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/68, ஜே/69, ஜே/71, ஜே/72, ஜே/73, ஜே/ 81, ஜே/83 ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இன்று வியாழக்கிழமை மார்ச் மாதத்திற்கான 4 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது.

**மாக்பெட்டில்...**

யாழ்.மாக்பெட் எரிபொருள் விற்பனை நிலையத்தில் இன்று பெற்றோல் மற்றும் மண்ணெண்ணை விநியோகம் இடம்பெறவுள்ளது.

கடந்த 14ஆம் திகதிக்கு முன்னர் ஆட்டோ மற்றும் மோட்டார் கார்களுக்குப் பெற்றோல் பெற்றவர்களுக்கு நாளை விநியோகம் இடம்பெறும்.

இதேவேளை- மார்ச் மாதத்திற்கான மண்ணெண்ணையைப் பெற்றுக் கொள்ளாத ஜே/76, 77, 78, 79, 80, 82, 84, 85, 86, 87,88 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்கள் இன்றும், எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தமக்குரிய மண்ணெண்ணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

(202-4-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வியவருடம் பங்குனி மாதம் 8 ஆம் நாள் (22.03.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரையுள்ள இடப லக்கினம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சாந்தகுமார்** அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **துளசி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமண மாங்கல்யதாரணம் Ananda Hall, no.07, Dechsach Kolani, Kasturibai Nagar, Madras 20இல் நடத்த பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு)

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி கந்தசாமி குடும்பத்தினர்,
காளி கோயிலடி, வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டை

திரு.திருமதி ந.கனகரட்ணம் குடும்பத்தினர்,
காளி கோயிலடி, ஏழாலை மத்தி, ஏழாலை.

(58936)

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை கந்தசாமி

அராலி தெற்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கந்தசாமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் கணவரும் கலாநிதி சிதம்பரநாதன் (முதுநிலை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), விமலநாதன் (ஆசிரியர்), கணநாதன், கமலநாதன், ஜெகநாதன் ஆகியோரின் தந்தையும் பத்மினி சிதம்பரநாதன் (நாடாளுமன்ற உறுப்பினர்), விமலாதேவி (அதிபர்), ராஜேஸ்வரி, சாந்தினி, சுபா ஆகியோரின் மாமனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று பி.ப.3மணிக்கு அராலியில் நடைபெறும்.

*தகவல்: மகன்மார்.*

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான வியவருடம் பங்குனி மாதம் 10ஆம் நாள் (24.03.2007) சனிக்கிழமை மு.ப. 10.54 முதல் 11.15 மணி வரையுள்ள ஷஷ்டி திதியும் ரோகினி நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் **நிறஞ்சன்** (ஆசிரியர்) அவர்களுக்கும்



எமது புத்திரி திருநிறை செல்வி **சுமதி** (முகாமைத்துவ உதவியாளர், மன்னார்) அவர்களுக்கும்

பிளாக் வீதி, சங்கானையில் உள்ள இல்லத்தில் திருமாங்கல்யம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

★26.03.2007 மணமகன் வீட்டில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

திரு.திருமதி பொ.கிருஷ்ணமூர்த்தி
பிளாக் வீதி, சங்கானை.

திரு.திருமதி இ.இராஜதுரை
பிரதான வீதி, சங்கானை.

(58936)

(இருவீட்டார் அழைப்பு)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

867 நீலம்

வெற்றி இலக்கங்கள்

03 40 43 45

சிங்கம்

20-03-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4923410 - 4939000

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 339,570 | 10/- | 3,395,700/- |
| 2 இலக்கங்கள் | 31,238 | 20/- | 624,760/- |
| 1 இல. + லக்கினம் | 30,972 | 30/- | 929,160/- |
| 2 இல. + லக்கினம் | 2,806 | 100/- | 280,600/- |
| 3 இலக்கங்கள் | 821 | 500/- | 410,500/- |
| 3 இல. + லக்கினம் | 76 | 5,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,320,720/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 405,492 | | 8,344,220/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5407495 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 மார்ச் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 4931131-8-53 |
| மாத்தறை | 4925970-5-30 |
| பொலன்னறுவை | 4925580-1-49 |
| பதுளை | 4928784-3-49 |
| மொனராகலை | 4927933-4-89 |


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி கந்தசாமி



கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மெசஞ்சர் வீதி, இல.174/3/7 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி அன்னலட்சுமி 21.03.2007 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வே.கந்தசாமியின் அன்பு மனைவியும் விசாலாட்சி (கமநல சேவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்-புலோலி), பாமா, விமலா(லண்டன்), சுதாகரன் (லண்டன்), சுதாமதி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் தனபாலசிங்கம் (ஜேர்மனி),கார்த்திகேசன், மகேந்திரன்(லண்டன்), விஜயதர்சினி(லண் டன்), அன்பரசன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சிந்துஜன், லக்சிதன், கோகுலன், பிரிஹரன், ஸ்ரீபிரணவன், அக்ஷனா, துசாந்தன், லாவண்யா, கிருஷ்சாந்த், கீரன், சகீரன், சினேகா, விவேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(22.03.2007) வியாழக்கிழமை ஜயரத்னா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 4 மணிக்கு பொரளை கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ.பே.: 2387 292 - 2391107, 0777 311152*
*கார்த்தி*

தகவல்: விசாலாட்சி தனபாலசிங்கம் (மகள்)

(58957)

## வருடாந்த மகோற்சவம்

ஏழாலை மத்தி, ஏழாலை வசந்தி கோவிலென விளங்கும் அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று (22.03.2007) வியாழக்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் விசேட பூசைகள் நடைபெறும். 01.04.2007 ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். 02.04.2007 குளிர்த்தி பூஜையும் நடைபெறும்.

**ஆலய பிரதமகுரு**
**வசந்தி அம்மா**

(58936)

## மரண அறிவித்தல்கள்

### சோதிடர் சண்முகம் ஜெகதீசன்

சண்முகம் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சோதிடர் சண்முகம் ஜெகதீசன் 21.03.2007 நேற்று சுழிபுரத்தில் காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சோதிடர் சண்முகத்தின் அன்பு மகனும் பூமாதேவியின் அன்புக்கணவரும் உஷாதேவியின் அன்புச் சகோதரரும் விக்னராஜா, பிரணவராஜா, கௌசி, பாசினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகாந்தன், றெஜினா, மனோகரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2007) வியாழக்கிழமை நண்பகல் 12மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*த.மு.ஐயனார் கோயிலடி, சுழிபுரம் மேற்கு.*

தகவல்: பெ.பூமாதேவி (மனைவி).

### சதாசிவம் ரகுநாதன்

4ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் முருகனூர், வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் ரகுநாதன் 20.03.2007 செவ்வாய்க்கிழமை வவுனியாவில் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி, சங்கானை.*

தகவல்: சின்னப்பு துரைச்சாமி (சிறிய தந்தை).

(சி/50841)

### தில்லையம்பலவாணர் சம்பந்தன்

*(அன்னை நாகா பூட் சிற்றி, யாழ்ப்பாணம்)*



புத்தூரைப்பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலவாணர் சம்பந்தன் நேற்று (21.03.2007) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் நளினியின் அன்புக்கணவரும் தனுசியானின் அன்புத்தந்தையும் தில்லையம்பலவாணர் (பதிவாளர், வலி.கிழக்கு), சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மகனும் அமரர் பாலசுப்பிரமணியம் (ஆசிரியர்)-விஜயலட்சுமி தம்பதியரின் மருமகனும் கோபாலகிருஸ்ணன் (சுபேஸ் றேடர்ஸ், புத்தூர்), விமலன் (பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (21.03.2007) புதன்கிழமை பிற்பகல் 3மணியளவில் இந்தியா போரூர் மலர்ச்சாலையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் மேற்கு, புத்தூர். தொ.பே.:0214591988.*

தகவல்: குடும்பத்தினர்.

(58968)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### நாகலிங்கம் இராசேந்திரம்

*தோற்றம்* 23-10-1950 — *மறைவு* 20-02-2007

*கடந்த 20.02.2007 இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (22.03.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தகையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(58936)

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம்



தாளையடி லேன், திருநெல்வேலியை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம் (ஓய்வு பெற்ற மதுவரி பரிசோதகர், மதுவரித் திணைக்களம்) 20.03.2007 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நீலாயதாட்சி (கண்ணுஅக்கா) தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற திருமதி ஜெயலக்ஷ்மி ஜெயரட்ணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி ஜெயந்தி பாலசுப்பிரமணியம் (ஆசிரியை, யா/முத்துத்தம்பி ம.வி., திருநெல்வேலி),ஜெ.ஜெயகணேஸ் (பாபு - கணக்காளர், R.D.D, திருகோணமலை), ஜெ.ஜெயரமேஸ் (சூரி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும் செல்வி கஜேந்தினி, நேரு (ஹேமா) அவர்களின் வளர்ப்புத் தந்தையும், ரி.பாலசுப்பிரமணியம் (சிறுவர் பாதுகாப்பு நிதியம், யாழ்ப்பாணம்), திருமதி விஜயா ஜெயகணேஸ் (ஆசிரியை), திருமதி வாசுகி ஜெயரமேஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற ஜெயசிங்கம் (மஸ்கன்ஸ்), ஜெகநாதன் (பொலிஸ் உத்தியோகத்தர்), ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி நாகேஸ்வரி ஜெயசிங்கம், காலஞ்சென்ற திருமதி ராஜராஜேஸ்வரி, ஜெயநாதன், திருமதி செவ்வந்தி ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பா.ஆரணியா, பா.ஜீவிதா, பா.ஜெயசீலன், ஜெ.அருண்ராம், ஜெ.ஆதிக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை அனைவ்ரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தாளையடி லேன், திருநெல்வேலி.*

*தகவல்: திருமதி ஜெயந்தி பாலசுப்பிரமணியம் (மகள்).*

(58936)

### திருமதி லட்சுமி நாராயணன்



வராத்துப்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி லட்சுமி நாராயணன் 20.03.2007 இல் காலமானார்.

அன்னார் அமரர் க.நாராயணனின் அன்பு மனைவியும் அமரர் பூபாலசிங்கம் சங்கரப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியரும் ஐ.சி.ஆர்.சி. அலுவலர், திருகோணமலை), திருமதி பாக்கியம் இராசரத்தினம் (கனடா), மாணிக்கம் சின்னமணி, கிருஸ்ணபிள்ளை ஜெயலட்சுமி, சீவரத்தினம் பாக்கியநாதன், செல்வி மல்லிகா நாராயணன் (ஆசிரியை கொ/ஹம்ஸா முஸ்லிம் மகாவித்தியாலம்), தவகுலரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயும் இராசரத்தினம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம் - கனடா), மாணிக்கம், அமரர் கிருஸ்ணபிள்ளை, பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை),அமரர் பாக்கியநாதன் (ஓய்வு பெற்ற ஊழியர், கே.கே.எஸ். சிமெந்துக் கூட்டுத்தாபனம்), புவனேசுவரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நேற்று( 21.03.2007)புதன்கிழமை ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வராத்துப்பளை, பருத்தித்துறை*

தகவல்: குடும்பத்தினர்.

(58957)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org